செ.வெ.எண்:18 நாள்:15.04.2021

# *கிருஷ்ணகிரி மாவட்டத்தை கொரோனா நோய்தொற்று இல்லாத மாவட்டமாக உருவாக்கிட பொதுமக்கள் அனைவரும் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும்.*

## *கிருஷ்ணகிரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் அரசு முதன்மைச் செயலர், வணிகவரி மற்றும் பத்திரபதிவுத்துறை டாக்டர். பீலா ராஜேஷ், இஆப., அவர்கள் வேண்டுகோள்.*

---

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (15.04.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தலைமையில், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் அரசு முதன்மை செயலர், வணிகவரி மற்றும் பத்திர பதிவுத்துறை டாக்டர். பீலா ராஜேஷ், இஆப., அவர்கள் அனைத்து துறை அலுவலர்களுடன் கொரோனா நோய் தொற்று பாதுகாப்பு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

**கிருஷ்ணகிரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் அரசு முதன்மைச் செயலர், வணிகவரி மற்றும் பத்திர பதிவுத்துறை டாக்டர். பீலா ராஜேஷ், இஆப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:**

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை தடுப்பதற்காக, மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டில் பல்வேறு கட்டங்களில் பல்வேறு தளர்வுகளுடன் பொதுமக்களின் நலன் கருதி ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு கடைபிடிக்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள நோய் பரவல் நிலை, வெளிநாடுகளில் உருமாறிய கொரோனா வைரஸின் தாக்கம், அண்டை மற்றும் இதர வெளிமாநிலங்களில் அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் பாதிப்பிற்குள்ளானவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கொரோனா வைரஸ் நோய்த்தொற்றை தடுப்பதற்காக, மீண்டும் பல்வேறு கட்டுப்பாடுகளுடன் ஊரடங்கு தொடர்ந்து 30.04.2021 நள்ளிரவு 12.00 மணி வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் நோய் தொற்று உலகளாவிய பொதுசுகாதார அவசர நிலையாக அறிவிக்கப்பட்ட நிலையில், பொதுமக்களின் அன்றாட வாழ்வு மற்றும் பொருளாதார சூழ்நிலையில் பாதிப்பு ஏற்படாத வகையில் தமிழ்நாடு அரசு மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 25.03.2020 முதல் சுகாதாரத்துறை, காவல்துறை, வருவாய்த்துறை, உள்ளாட்சித்துறை மற்றும் பிறதுறைகள் சார்ந்த முன்களப் பணியாளர்கள் இணைந்து பொதுமக்களை கொரோனா நோய்த்தொற்று பாதிப்பிலிருந்து பாதுகாத்து வருகின்றனர். மேலும், மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் குழுக்கள் அமைக்கப்பட்டு மாநில எல்லைகளின் வழியாக வரும் வாகனங்கள் முழு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அனுப்பும் பணிகள், வெளிநாடு மற்றும் வெளிமாநிலங்களிலிருந்து வரும் நபர்களை தொடர்ந்து கண்காணிக்கும் பணிகள், தொடர்

**RTPCR** பரிசோதனைகள், என பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இருந்தபோதிலும், கொரோனா நோய்த்தொற்று இரண்டாம் அலை பரவி வரும் இச்சூழ்நிலையில் பொதுமக்கள் முழுவிழிப்புணர்வுடன் செயல்பட்டு சுயபாதுகாப்புடன் தங்களையும், சமுதாயத்தையும் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து பாதுகாக்க வேண்டும்.

இன்று (15.04.2021) நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள கொரோனா நோய் தொற்று பாதுகாப்பு பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இதில், அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் முன்கள பணியாளர்கள் அனைவரும் தங்களை முழுமையாக இந்த அவசரநிலை கால பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டு பணியாற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 5 கொரோனா தொற்று பரிசோதனை ஆய்வகங்கள் மூலம், 13.04.2021 வரை பரிசோதனை செய்யப்பட்ட 2,49,230 நபர்களில் 2,38,590 நபர்களுக்கு கொரோனா தொற்று இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது. நாளதுவரை 9,486 நபர்கள் கொரோனா நோயால் பாதிக்கப்பட்டு, 8,594 நபர்கள் குணமடைந்து வீடு திரும்பி உள்ளனர். 773 நபர்கள் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்கள். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 17 கட்டுப்பாட்டு மண்டலங்கள், 486 கட்டுப்பாட்டு பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 2021 மாதத்தில் நாளது வரை 15,210 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதில் 862 நபர்கள் கொரோனா நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் 38 நபர்களும், ஓசூர் அரசு மருத்துவமனையில் 17 நபர்களும், தனியார் மருத்துவமனையில் 94 நபர்களும், வேறு மாவட்டம்/மாநிலங்களில் இருந்த வந்த 48 நபர்களும், நேற்று (14.04.2021) கண்டறியப்பட்டுள்ளவர்கள் 156 நபர்களும், வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்ட 420 நபர்கள் என மொத்தம் 773 நபர்கள் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

அரசு பொறியியல் கல்லூரி சிறப்பு மையம் (பர்கூர்), பட்டுவளர்ச்சி துறை பயிற்சி சிறப்பு மையம் (ஓசூர்) ஆகிய இடங்களில் தற்காலிக கொரோனா வைரஸ் தொற்று சிகிச்சை மையம் அமைக்கப்பட்டுள்ளது. அரசு மருத்துவமனை மற்றும் கோவிட் கட்டுப்பாட்டு மருத்துவமனைகளில் 794 படுக்கை வசதிகளும், தனியார் மருத்துவமனைகளில் 180 படுக்கை வசதிகள் என மொத்தம் 974 படுக்கை வசதிகளும், தீவிர சிகிச்சை பிரிவில் 60 படுக்கை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நாளதுவரை சுகாதாரப்பணியாளர்கள், முன்களப்பணியாளர்கள், 45 வயதிற்கு மேற்பட்டவர்கள், தொழிற்சாலைகளில் பணிபுரியும் நபர்கள் என 1,01,706 நபர்களுக்கு (Covishield) தடுப்பூசியும், 11,349 நபர்களுக்கு CovAXIN தடுப்பூசி என மொத்தம் 1,13,055 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது.

தற்பொழுது மாவட்ட நிர்வாகம் போர்கால அடிப்படையில் மேற்கொண்ட பல்வேறு விழிப்புணர்வு பணிகளை மேலும் அனைத்து பகுதிகளுக்கும் சென்றடையும் வகையில் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணியாற்ற வேண்டும். 45 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் தவறாமல் கொரோனா தடுப்பு ஊசி போட்டுக்கொள்வதை உறுதிபடுத்திட வேண்டும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கோவிட் தடுப்பூசிகள் மற்றும் மருந்துகள் போதிய அளவில் இருப்பு உள்ளது. மேலும், தடுப்பூசிகள் தேவைப்படும் பட்சத்தில் வழங்க தேவையான அளவு இருப்பில் உள்ளது. எதிர்வரும் 15 நாட்கள் நாம் கொரோனா தொற்றை எதிர்கொள்ளும் வகையில் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும். கொரோனா நோய்தொற்று பரவலை தடுப்பதற்கு தடுப்பூசியே சிறந்த வழி, அனைவரும் முகக்கவசம் கட்டாயம் அணிய வேண்டும். அனைத்து வணிக நிறுவனங்கள், உணவகங்களில் கட்டாயம் அனைவரும் முகக்கவசம் அணிவதை உறுதி செய்ய வேண்டும். எந்தவித அச்சமும் இல்லாமல் கொரோனா தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். மேலும், கொரோனா நோய் பரவாமல் தடுப்பதற்கான வழிமுறைகளை மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது.

பொது இடங்களில் பொதுமக்கள் முகக்கவசம் அணிவதையும், அரசு வெளியிட்ட நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை நிறுவனங்கள் கடைப்பிடிப்பதையும், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு, சுகாதாரத்துறை, காவல்துறை, வருவாய் துறையினர் கண்காணிக்க வேண்டும். இதனை மீறுபவர்கள் மீது பொது சுகாதார சட்டத்தின் கீழ் அபராதம் விதிக்க வேண்டும். காய்ச்சல் முகாம்களை அதிகப்படுத்தி நோய்த்தொற்று உள்ளவர்களை கண்டறிய வேண்டும். கொரோனா தடுப்பூசி எண்ணிக்கையை அதிகப்படுத்துதல் வேண்டும். மேலும், மக்கள் அதிகமாகக்கூடும் கலாச்சார, வழிபாட்டுத்தலங்களில் முகக்கவசம் அணிவதை கட்டாயப்படுத்த வேண்டும். தடுப்பூசி செலுத்திக் கொள்வதன் அவசியம் குறித்தும், முககவசம், சமூக இடைவெளி மற்றும் அடிக்கடி கைகளை சோப்பு கொண்டு நன்கு கழுவுதல் ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களுக்கு படங்கள், துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள் மற்றும் கையேடுகள் மூலம் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என கிருஷ்ணகிரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் அரசு முதன்மை செயலர், வணிகவரி மற்றும் பத்திர பதிவுத்துறை டாக்டர். பீலா ராஜேஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

மேலும், சட்டமன்ற பொதுத்தேர்தல் முடிவுற்றுள்ள நிலையில் வருகின்ற மே 2 அன்று வாக்கு எண்ணும் மையத்திற்கு வருகை தரும் அரசியல் கட்சி முகவர்கள், பிரதிநிதிகள், வேட்பாளர்கள், தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், காவல்துறையினர், பத்திரிக்கையாளர்கள் என அனைவரும் கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டதை உறுதி படுத்திட வேண்டும், வாக்கு எண்ணும் மையமான அரசு பல்தொழில்நுட்ப கல்லூரியில் கொரோனா நோய்தொற்று தொடர்பான அரசின் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என கிருஷ்ணகிரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் அரசு முதன்மை செயலர், வணிகவரி மற்றும் பத்திர பதிவுத்துறை டாக்டர். பீலா ராஜேஷ், இ.ஆ.ப., அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக, கிருஷ்ணகிரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் அரசு முதன்மை செயலர், வணிகவரி மற்றும் பத்திர பதிவுத்துறை டாக்டர். பீலா ராஜேஷ், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (15.04.2021) கிருஷ்ணகிரி நகராட்சி சிட்கோ தொழிற்பேட்டை வளாகத்தில் தொழில் நிறுவனங்களில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா தடுப்பூசி முகாம் மற்றும் கிருஷ்ணகிரி அரசு தலைமை மருத்துவமனையில் 190 படுக்கை வசதிகள் கொண்ட கொரோனா சிறப்பு சிகிச்சை மையம் மற்றும் கொரோனா தடுப்பூசி மையம் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும், அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள 512 படுக்கைகளில் 450 படுக்கைகளுக்கு 24 மணிநேரமும் தங்குதடையின்றி நேரடியாக பிரணவாயு (Oxygen) செலுத்தும் வகையில் சுமார் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள 13 ஆயிரம் லிட் கொள்ளவு கொண்ட, LIQUID OXYGEN TANK மற்றும் AIR VAPORIZING COLUMN ஆகியவற்றை பார்வையிட்டு அதன் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்நிகழ்வுகளின்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பண்டி கங்காதர் இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ரெ.சதீஸ், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திரு.பெரியசாமி, ஓசூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.பாலசுப்பிரமணியன், கிருஷ்ணகிரி அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் மரு.ஆர்.முத்துசெல்வன், வருவாய் கோட்டாட்சியர்கள் திருமதி.ஜி.கற்பகவள்ளி (கிருஷ்ணகிரி), திரு.பி.குணசேகரன் (ஓசூர்), இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.பரமசிவன், துணை இயக்குநர்(சுகாதாரப்பணிகள்) மரு.கோவிந்தன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.ராஜசேகர், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு.ச.கண்ணன், இணை இயக்குநர் (தொழிற்சாலைகள்) திருமதி.என்.சபீனா, மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திரு.எஸ்.பிரசன்ன பாலமுருகன், கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளர் திருமதி.ஆர்.சந்திரா உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**